# மலையக ஆவணகம்
# ஆண்டறிக்கை 2020/2021

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | மலையக ஆவணகம் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2019/0065 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | ஆகஸ்ட் 2020 - யூன் 2021 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | மலையக மக்கள் ஒன்றியம், நமது மலையகம், Action Changes Things, Solidarity for Malayaham, மாத்தளை தமிழ் பட்டதாரிகள் ஒன்றியம், Universal Printers |
| முக்கிய பங்குத்தாரர்கள் | எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |
| செயற்றிட்டச் செலவுகள் | 2020 - LKR 266,485.67<br>2021 - LKR 101,100.00 |

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான அறிவு வளங்களை ஆவணப்படுத்தி எண்ணிம வகை யில் பாதுகாத்து அனைவருக்கும் கிடைக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபடும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஆகும். மலையக ஆவணகம் தொடர்பான செயற்பாடுகள் 2010களில் இருந்து நூலக நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 2012இல் மலையக ஆவணகம் ஒரு சிறப்புச் சே கரமாக உருவாக்கப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக, ஒரு ஊழியர் வளம் ஒதுக்கப்பட்டு வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணப்படுத்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. தொழிற்கலைகள் ஆவணப்படுத்தல், ஊர் ஆவணப்படுத்தல் போன்ற அனைத்து நூலக நிறுவனச் செயற்பாடுகளிலும் மலையகம் இடம்பெற்று வருகிறது. மலையக மக்களின் ஆவணப்படுத்தல் சார்ந்த சில அடிப்படை ஆய்வு (மலை களின் குரல்கள்: வாய்மொழி வழக்காறுகளும் மலையகத் தமிழர் ஆவணவாக்கமும்) முயற்சிகளிலும் ஈடுபட்டு வந்துள்ளது. எனினும், மலையகம் தொடர்பான ஆவணப்படுத்தலை மேலும் விரிவாக முன்னெடுக்க வேண்டிய தேவை நன்கு உணரப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டு காலப்பகுதியில் நூலக நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட மலையக ஆவணகச் செ யற்பாடுகள் பல்லூடக மலையக ஆவணகத்தில் 300+ ஒளிப்படங்கள், 100+ வாய்மொழி வரலாறுகள், 25 காணொளிகள், 10 குறுங்கால ஆவணங்கள், 5 நிலப்படங்கள் என்று பல்வகைப்பட்ட ஆவணங்கள் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன. மலையகத் தமிழர் தொடர்பான மக்களின் படைப்புக்களை முதன்மைப்படுத்தி, மலையக மக்களால் தொகுக்கப்பட்ட ஆவணகம் இதுவாகும். மலை யக எண்ணிம நூலகத்தில் 185 நூற்கள், 19

இதழ்கள், 11 ஏனை ய வெளியீடுகள் எண்ணிம முறையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. நூலக நிறுவனம் தமிழ் விக்கிப்பீடியா - விக்கிமீடியா நிறுவனத்துடன் இணைந்து முன்னெடுத்த இலங்கைத் தமிழ்ச் சமூகங்களின் தொழிற்கலைகளை ஆவணப்படுத்தும் செ யற்றிட்டத்தின் ஒரு பகுதியாக மலையகத்திலும் தொழிற்கலைகளை பல்லூடக முறையில் ஆவணப்படுத்தும் முயற்சிகள் மெற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் பல்லூடக ஆவணப்படுத்தல், களப்பணிகள், விக்கிப்படியா தொகுப்பு தொடர்பான பயிற்சிப் பட்டறைகளையும் நூலக நிறுவனம் மலையக அமைப்புகளுடன் இணைந்து மலையகத்தில் நடாத்தியுள்ளது.நூலக நிறுவனத்தின் வாய்மொழி வரலாற்று ஆய்வு நிலையம் - மலை யக ஆவணகம் திட்டங்களின் கீழ் ஏறத்தாழ 130 + மலை யகம் சார் வாய்மொழி வரலாறுகள் ஒலிவடிவிலும் நிழற்படமாகவும் தொகுக்கப்பட்டுள்ளன.

மலையகத் தமிழரின் அரசியல், பொருண்மிய, சமூக, பண்பாட்டு வரலாறுகளையும் வாழ்வியலையும் கூட்டு முறையில் ஆவணப்படுத்தும் நோக்கிலான இத்திட்டம் இரு முதன்மை இலக்குகளைக் கொண்டது:

- மலை யகத் தமிழ்ச் சமூகங்களுடன் இணைந்து கட்டற்ற அணுக்கத்துடனான ஓர் எண்ணிம சமூக ஆவணகத்தை உருவாக்கல்.மற்றும் சேகரிப்பு ரீதியாக மலைய ஆவணங்களை திரட்டல் என்ற வகையில் ஆகஸ்ட் 2020 இத்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு யூன் 2021 வரை நூலக சேகர அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகள் இடம்பெ ற்றன. அவற்றின் அடை வுகள் பின்வருமாறு.

| மாதங்கள் | ஆவணங்கள் | பக்கங்கள் | ஆளுமைகள் |
|---|---|---|---|
| ஆகஸ்ட் | 20 | 1532 | - |
| செ ப்டம்பர் | 24 | 3425 | - |
| ஒக்டோபர் | 7 | 2018 | - |
| நவம்பர் | - | - | 27 |
| டிசம்பர் | 70 | 3834 | - |
| ஜனவரி | 9 | 2544 | 5 |
| பெப்ரவரி | 20 | 3620 | 3 |
| மார்ச் | - | - | - |
| ஏப்ரல் | 15 | 4052 | - |
| மே | 44 | 8696 | - |

| | | | |
|---|---|---|---|
| யூன் | 28 | 4514 | 17 |
| மொத்தம் | 237 | 34235 | 52 |

எதிர்கொண்ட சவால்கள்

- திட்டமிடலின் படி செயற்றிட்டத்தினை முன்னகர்த்த முடியாமை.
- இவ்வாண்டில் கோவிட் 19 காரணமாக அதிகமாக அடைவுகள் சார்ந்த விடயங்களை எட்டுவது கடினமாக அமைந்தது. குறிப்பாக மூன்று மாதங்கள் முழுமையாக வேலைகளை தொடர முடியாத நிலைமை காணப்பட்டது.
- அலுவலக இடத்தை தீர்மானிப்பது பெரும் சவாலாக காணப்பட்டது.
- பணியாளர் விலகல் 10 மாதங்களில் இரு பணியாளர்கள் இணைந்தமை. அதற்கான பயிற்சிகளினால் கால தாமதம் ஏற்பட்டமை.
- மின்வருடுவதற்காக ஆவணங்கள் அதிகமாகவே கள ஆய்வாளரால் சேகரிக்கப்பட்டன. அவற்றை மின்வருடுவதற்கான மனிதவளப்பற்றாக்குறை ஓர் சவாலாக அமைந்தது.
- வாய்மொழி வரலாற்றை தொடர்ச்சியாகப் பெறப்படவில்லை.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- இத்திட்டத்திற்கான எண்ணிமப்படுத்துவதற்கான ஊழியர் நியமிக்கப்படலாம்.
- ஏற்கனவே பட்டியல் இடப்பட்ட ஆவணங்களை விரைந்து செய்து முடித்தல்.
- மீதரவு இற்றைப்படுத்தல் சார்ந்த பயிற்சிகளை எண்ணிமபாதுகாப்பு அலுவலகருக்கு வழங்குதல்
- காப்புபடி கிடைத்தும் ஆவணங்கள் மீள்பார்வை செய்து உடனடியாக பின்னுட்டல்களை வழங்குதல்
- மேலதிக பதிவுக்கருவி, வேறு மாவட்டங்களுக்கு செல்வதற்கான பயண செலவீனங்களை நிதிப்பங்காளர்களிடம் பரிந்துரை செய்தல் அவசியம்
- ஊழியர்களுக்கு வாய்மொழி வரலாறு, ஆய்வு சார்ந்த பின்புலங்களை உருவாக்குதல் புதிய ஆய்வுகளை இனங்காணுவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.
- தன்னார்வலர்களை இணைத்து ஏனைய பிராந்தியம் விடயங்களை உளீர்க்க முடியும்.

பின்னிணைப்புக்கள்

[மலையக ஆவணகம்]